[1993 ஏப்ரல் 23

455—

சங்ககிரியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாய நலக்கூடம் அமைத்தல்.

*11336—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சங்ககிரி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாய நலக்கூடம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் சென்ற ஆண்டு 24 இலட்சம் ரூபாயில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குச் சங்ககிரியில் ஒரு மாணவர் விடுதி கட்ட அனுமதி அளித்த என்னுடைய அன்னையின் தாழ்பணிந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சமுதாய நலக்கூடம் கட்டுவதற்காக அந்த விடுதிக்கு அருகிலேயே 1 ஏக்கர் 45 சென்ட் அரசு நிலம் உள்ளது. அதைப் பயன்படுத்தி, அந்த சமுதாய நலக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரித் தொகுதிக்குச் சென்ற ஆண்டே 24 இலட்சம் ரூபாய் செலவில் மாணவர் விடுதி தந்திருக்கிறோம். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாயைத்தான் இந்த சமுதாயக் கூடத்திற்கு ஒதுக்கி இருக்கின்றோம். ஏற்கனவே அரசு கொடுத்த உறுதிமொழிகள் எல்லாம் இருக்கின்றன. அதையெல்லாம் கருத்தில் கொண்டு இது பரிசீலிக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மூலம் அந்த நிலத்தை

1993 ஏப்ரல் 23]

யாவது தற்போதே அந்த சமுதாயக் நலக் கூடம் கட்ட அனுமதி கேட்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : இது வருவாய்த் துறை பற்றிய கேள்வியாக இருப்பதால் இதை வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண். 457, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

457—

செம்பனார் கோவில் ஒன்றியத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டுதல்.

*15202— திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கடற்கரையோர செம்பனார் கோவில் ஒன்றியத்தை மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி கடற்கரையோரம் 30 கி.மீ. தூரம் உள்ள தொகுதி, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் 20,000-க்கும் அதிகமான மீனவர்கள் வாழ்கின்ற தொகுதி. அங்கே ஏழையெளிய மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு பூம்புகாரிலிருந்து சந்திரப்பாடி வரை 12 பஞ்சாயத்துகளும்